விஜயபாரதம்
மின்னனு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 5 சனி 21.08.2021 மலர் - 2, இதழ் - 137


# மோடியை பாராட்டிய கபில்தேவ்



விஜயபாரதம்

பிரதமர் மோடியை பாராட்டி முன்னாள் கிரிக்கெட் கேப்டன் கபில் தேவ் ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

பாரதத்தில் எந்தப் பிரதமரும் நம் நாட்டில் விளையாட்டு கலாச்சாரத்தை உருவாக்க விரும்புவதாக எப்போதாவது கூறியிருக்கிறாரா, குழந்தைகளை விளையாட ஊக்குவிக்குமாறு பெற்றோரிடம் வேண்டுகோள் விடுத்தாரா என்பது தெரியவில்லை. பிரதமர் மோடிதான் முதலில் இதைச் செய்தவராக இருப்பார்.


மக்கள் ஒரு விளையாட்டு வீரரின் வெற்றியைப் மட்டுமே கொண்டாடுகின்றனர். தோல்வியடைந்தவர் மறக்கப்படுவார். ஆனால், வெற்றி, தோல்வியைப் பொருட்படுத்தாமல் தனது போராட்டத்தில் அக்கறை கொண்ட ஒருவர் உள்ளார் என்பதுதான் ஒரு விளையாட்டு வீரரின் முக்கியத்தேவை. அவ்வகையில், பிரதமர் மோடியின் மரியாதை விளையாட்டு வீரர்கள் எடுக்கும் முயற்சிக்குதான், பதக்கங்களுக்கு அல்ல என்பது தெளிவாகிறது.

ஒருவர் வெற்றிபெறும்போது அவர்களை அழைத்து பேசுவார்கள். ஆனால் பிரதமரோ தோற்றபோதும் அவர்களை அழைத்துள்ளார். உதாரணமாக, வினேஷ் போகத், போட்டிகளில் தோற்றதால் அதிகமாக கோபப்பட்டார். ஆனால் மோடி, "வெற்றியை ஒருபோதும் உங்கள் தலையில் ஏறி அமர விடாதீர்கள், தோல்வியை உங்கள் இதயத்திற்கு செல்ல விடாதீர்கள்". என்று ஆறுதல் கூறினார். இது அனைவருக்கும் பொருந்தும். இது ஒரு ஞானியின் ஆலோசனை.

ஒலிம்பிக் வீரர்கள் பெரும் எதிர்பார்ப்புகள் கொண்டுள்ளனர். அவர்களின் நம்பிக்கைகள் சிதறும்போது, அவர்கள் சுய தண்டனையை அனுபவிக்கின்றனர். அந்த நேரத்தில், அவர்களுக்கு ஒரு ஆதரவான தோள் தேவை. தேசம் முழுவதும் அவர்களுக்கு துணை நிற்கிறது என்பதைக் காட்ட பிரதமரை விட சிறந்தவர் யார்?

பிரதமர், ஒவ்வொரு விளையாட்டு வீரரின் பெயர், அவரின் விளையாட்டு, குடும்பம், வாழ்க்கை, பிரச்சனைகள் என அனைத்தையும் நன்கு அறிந்திருந்தார். அதனை குறித்து

அவர்களிடம் பேசினார்.



பொதுவாக, அரசு நடத்தும் நிகழ்ச்சிகளில் அரசியல்வாதிகளின் உரைகள் மட்டுமே இருக்கும். அதில் விளையாட்டு வீரர்கள் ஒரு பொருட்டல்ல என்ற நுட்பமான செய்தி இருக்கும். ஆனால், இந்நிகழ்வின் போது, பிரதமர் விளையாட்டுகள் மையமாக இருப்பதை உறுதிசெய்தார். வீர்களுக்கு இது ஒரு முக்கிய செய்தி. மோடி உண்மையிலேயே விளையாட்டுகளில் ஆர்வம் காட்டுகிறார்.

நான் ஒரு விளையாட்டு வீரனாக, சக வீரர்கள், பிரதமரிடமிருந்து அன்பையும் பாசத்தையும் பெறுவதைக் கண்டு மிகவும் உணர்ச்சிவசப்பட்டேன், மகிழ்ச்சியடைகிறேன்.

'மோடி ஜி, நீங்கள் அனைத்து விளையாட்டு சகோதரர்களின் மனங்களை வென்றுவிட்டீர்கள்'

## கோவில் நிலம் ஆக்கிரமிப்பு



விஜயபாரதம்

புதுச்சேரியில் இந்து அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள காமாட்சி அம்மன் கோவிலுக்கு சொந்தமான 30 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்தை சில மர்மநபர்கள் போலி ஆவணங்கள் மூலம் ஆக்கிரமிக்க முயற்சி செய்து வருகின்றனர். எனவே ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து கோவில் சொத்தை பாதுகாக்க வேண்டும் என்றும் ஆக்கிரமிப்பாளர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்றும் புதுவை பிரதேச விஸ்வகர்மா சமூக கூட்டமைப்பின் தலைவர் பாலகிருஷ்ண ஆச்சாரியுடன் இணைந்து புதுச்சேரி இந்து முன்னணி மாநில தலைவர் சனில் குமார் தலைமையில் இந்து முன்னணி சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## யோகி ஆதித்யநாத் கருத்து



விஜயபாரதம்

உ.பி. சட்டப்பேரவையில் முதல்வர் யோகி ஆதித்யநாத், 'தலிபான் பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக சிலர் பேசுகின்றனர். ஆப்கானிஸ்தானில் பெண்கள், குழந்தைகளுக்கு எதிராக தலிபான் பயங்கரவாதிகள் கொடுமைகள் இழைக்கின்றனர். போராட்டம் நடத்தும் சொந்த நாட்டு மக்களையே தலிபான்கள் சுட்டுக் கொல்கின்றனர். ஆனால், இங்கே சிலர் வெட்கமே இல்லாமல் தலிபான் பயங்கரவாதிகளை ஆதரிக்கின்றனர். அப்படி ஆதரிப்பவர்களின் முகத்திரையை கிழிக்கவேண்டும். அவர்களை மக்கள் முன் அம்பலப்படுத்த வேண்டும்' என்று கூறியுள்ளார்.

# கிஷன் ரெட்டி உருக்கம்



விஜயபாரதம்

ரிக்க்ஷாவுக்கு பணம் கொடுக்கக்கூட வசதி இல்லாத நான் இன்று மத்திய அமைச்சர் என்று மத்திய அமைச்சர் கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார். 'ஏழை அருந்ததியர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை யாரும் மத்திய அமைச்சராக்கியதில்லை. பாரதப் பிரதமர் நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்த பிறகு, என்னை தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத்தின் துணைத் தலைவராக்கினார். எந்தக் கட்சியும் செய்யாததை பா.ஜ.க செய்தது. செருப்பு தைக்கும் தொழிலாளி குடும்பத்தைச் சேர்ந்த என்னை மாநிலத் தலைவராக்கியது பா.ஜ.கவின் கட்சி கூட்டத்திற்கு சாதாரண தொண்டனாக திருப்பதிக்கு பஸ்ஸில் வந்துள்ளேன். ஆனால் தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த எம்.பிக்கள், என்னை பிரதமர் மோடி அறிமுகம் செய்து வைக்க முயன்ற பொழுது கங்ணம் கட்டிக்கொண்டு தடை செய்தனர். பட்டியல் இனத்தைச் சேர்ந்த 12 பேர், மலைவாழ் மக்கள் எட்டுப் பேர், ஓ.பி.சியில் 28 பேரை மத்திய அமைச்சர்களாக ஆக்கியது பா.ஜ.க. இது பா.ஜ.கவில் மட்டுமே சாத்தியம்' என்று அவர் தெரிவித்துள்ளார்.

---

# பனை மரத்தில் இளநீர்



விஜயபாரதம்

தி.மு.க வேளாண்துறை அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர் செல்வம், சட்டமன்றத்தில் உரை நிகழ்த்தும் பொழுது, தான் பனைமரத்தில் இருந்து இளநீர் பறித்து குடித்த சம்பவத்தை குறிப்பிட்டு பேசியுள்ளார். இது அவரின் விவசாய அறிவையும், அவர் வகிக்கும் பதவிக்கான தகுதியையும் குறித்த கேள்வியை எழுப்பியுள்ளது. அதே சமயம், தி.மு.கவில் இதெல்லாம் சகஜமப்பா என நெட்டிசன்களை கிண்டலடிக்கவும் வைத்துள்ளது. காரணம், தமிழக நிதியமைச்சரின் நிதி மேலாண்மை குறித்த அவரது அறிவின் முதிர்ச்சி அவர் வெளியிட்ட வெள்ளை அறிக்கையிலும், மத்திய அரசு திட்டங்களுக்கு தி.மு.கவின் ஸ்டிக்கரை ஒட்டி அவர் தயாரித்த பட்ஜெட்டும் வெளிச்சம் போட்டுக்காட்டிவிட்டது. முன்னதாக, ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதியில் தேர்தல் பிரச்சாரத்தின்போது வழங்கப்பட்ட பதநீரை பருகிய தி.மு.க தலைவர் ஸ்டாலின், பதநீர் மிகவும் ருசியாக உள்ளதே இதில் சர்க்கரை போட்டு உள்ளீர்களா? என்று கேள்வி எழுப்பியதை யாரும் மறந்திருக்க முடியாது.

# அப்போது ஒரு பேச்சு இப்போது ஒரு பேச்சு



விஜயபாரதம்

கடந்த 10 ஆண்டுகளாக அரசு இயந்திரத்தை தவறாக பயன்படுத்தியவர்கள், இரண்டு மாதத்தில் அரசு இயந்திரம் தவறாக பயன்படுத்தப்படுகிறது என்று கண்டுபிடித்து விட்டார்கள். இவர்களை ஒருவேளை புலனாய்வுத் துறையில் வேண்டும் என்றால் சேர்த்துக்கொள்ளலாம். அவசர கோலத்தில் கவர்னரிடம் சென்றுள்ளார்கள். ஒரு அரசின் செயல்பாட்டை தீர்மானிக்க ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் தேவை. கடன் வாங்குவதை குற்றம் சொல்ல முடியாது. அதனை எதற்கு பயன்படுத்துகிறார்கள் என்பது முக்கியம்' என கூறியுள்ளார். மத்தியில் பா.ஜ.க அரசு பொறுப்பேற்றது முதல், எந்தவித முகாந்திரமும் இல்லாமல், சகட்டுமேனிக்கு மத்திய அரசை குற்றம் கூறிவந்தவர்தான் இதே ப. சிதம்பரம். ஆனால், தங்களது கூட்டணி கட்சி தமிழகத்தில் ஆட்சிக்கு வந்தவுடன், அரசின் செயல்பாட்டை தீர்மானிக்க ஒன்று, இரண்டு ஆண்டுகள் தேவை என கூறுவது எந்தவிதத்தில் நியாயம், அப்போது ஒரு பேச்சு இப்போது ஒரு பேச்சா என பொதுமக்கள் கேள்வி கேட்டு வருகின்றனர்.


# கட்டுரை அளித்த அதிர்வுகள்



விஜயபாரதம்

கடந்த ஜூலை மாதம் 30ம் தேதி விஜய பாரதம் வார இதழில் பறையர் என்ற சொல்லுக்கு ஆக்ஸ்போர்டு அகராதியில் மிகவும் மோசமான பொருள் தந்து, திரித்து பல்லாண்டுகளாக இவ்வாறு வெளியிட்டு வருவதை கண்டித்து ஒரு கட்டுரை வெளியாகி இருந்தது. அதை படித்துவிட்டு நடிகர் ஒய்.ஜி மகேந்திரனின் மகளும், பா.ஜ.கவின் செயற்குழு உறுப்பினருமான மதுவந்தி, தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துகொண்டுள்ளார். மேலும், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் செயலை கண்டித்து கருத்து வெளியிட்டுள்ளார். தாழ்த்தப்பட்ட என்று எப்படி படித்தாலும் பொருளே தராத ஒரு சொல்லை பழம்பெரும் அகராதி என்று கூறிக்கொள்ளும் ஆக்ஸ்போர்டு அமைப்பு எப்படி வெளியிடலாம் என்று பலரும் கேள்வி கேட்டு வருகின்றனர். இக்கட்டுரை பலரது கவனத்தை இது ஈர்த்துள்ளது. அது குறித்த அவரது பேட்டியின் வீடியோவை https://www.youtube.com/watch?v=Dn1U2HHbwVw என்ற இணைப்பில் காணலாம்.

# பொருளாதாரம் மீட்சி



விஜயபாரதம்

ஆதித்திய பிர்லா குழுமத்தின் ஒரு பிரிவான ‘அல்ட்ராடெக்’ நிறுவனத்தின் ஆண்டு பொதுக்கூட்டத்தில் காணொலி வாயிலாக பங்குதாரர்களிடம் உரையாற்றிய அக்குழுமத்தின் தலைவர் குமார் மங்கலம் பிர்லா, 'கொரோனாவால் நிச்சயமற்ற நிலை இன்னும் நீடித்து வந்தாலும், நமது நாட்டின் பொருளாதாரம் வேகமாக இயல்பு நிலைக்கு திரும்பி வருகிறது. தொற்றுநோய்க்கு எதிரான தடுப்பூசி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது. அது மூன்றாவது அலையை எதிர்ப்பதற்கான சூழலை மேம்படுத்தியுள்ளது. நமது மத்திய அரசும், ரிசர்வ் வங்கியும் பல்வேறு ஆக்கபூர்வ நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இதனால், பொருளாதார குறியீடுகள் வளர்ச்சியை காட்டுவதாக அமைந்துஉள்ளன. பணி செய்யும் முறையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பல விஷயங்கள் டிஜிட்டல் மயமாகி வருகின்றன' என கூறியுள்ளார்.

# மகப்பேறு விடுப்பில் பாரபட்சம் கூடாது



விஜயபாரதம்

அரசு பணியில் உள்ள பெண்களுக்கு பேறுகால விடுப்பு வழங்கப்பட்டு வருகிறது. 1980ம் ஆண்டு முதல் 90 நாட்களாக இருந்த மகப்பேறு விடுப்பு காலத்தை கடந்த 2011ல் 6 மாதங்களாக அன்றைய முதல்வர் ஜெயலலிதா உயர்த்தினார். பின்னர் அதனை 9 மாதங்களாக உயர்த்தி 2016ம் ஆண்டு அறிவித்தார். இந்த பேறுகால விடுப்பு 12 மாதங்களாக உயர்த்தப்படும் என்று தி.மு.க அரசு சமீபத்தில் அறிவித்தது. இந்நிலையில், தற்காலிக பணியாளர்களுக்கும் 12 மாத மகப்பேறு விடுப்பு வழங்குவது குறித்த அரசாணையை அமல்படுத்தக்கோரி வழக்கறிஞர் ராஜகுரு என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். இதனை விசாரித்த நீதிமன்றம், பணி வரன்முறை செய்யப்பட்ட ஊழியர்களுக்கும், வரன்முறைப்படுத்தப்படாத ஊழியர்களுக்கும் ஒரே மாதிரியாக தமிழக அரசு மகப்பேறு விடுப்பு வழங்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

# மதுக்கடைகளை மூட வேண்டும்

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி என்.கிருபாகரன், பணியில் இருந்து நேற்று ஓய்வு பெற்றார். அதனையொட்டி உயர் நீதிமன்ற வளாகத்தில் அவருக்கு பணி ஓய்வு பாராட்டு விழா நடந்தது. அப்போது பேசிய அவர், 'நான் ஒரு போதும் என்னை நீதிபதியாக நினைத்துக் கொண்டதில்லை. சாதாரண நபராகவே இருந்தேன். வழக்கறிஞர் மற்றும் நீதிமன்றத்தின் மேன்மை காக்கப்படவில்லை எனில், மக்கள் நம்பிக்கை இழந்து விடுவர். சுதந்திர போராட்ட காலத்தில் பங்கேற்ற வழக்கறிஞர்கள் மேன்மையை, மீண்டும் கொண்டு வர வேண்டும். இளம் வழக்கறிஞர்கள், வழக்கறிஞர் தொழிலின் புனிதத்தை மீட்டெடுக்க வேண்டும். நீதிபதியாக பணி ஓய்வு பெறுவது திருப்தியாக இருந்தாலும், வழக்கறிஞர் தொழிலை முறைப்படுத்த முடியாதது, டாஸ்மாக் கடைகளை மூட முடியாமல் போனது மனதுக்கு நிறைவை அளிக்கவில்லை. மக்கள் நலன் கருதி மதுக்கடைகளை பகுதி அளவில் அரசு மூட வேண்டும். அதன் வாயிலாக, ஒரு நாள் மதுவிலக்கு அமலாகும்' என தெரிவித்தார்.

விஜயபாரதம்

# ஒரு மாநிலம் - ஒரு விளையாட்டு



விஜயபாரதம்

பாரதத்தில் நமது விளையாட்டுத் துறையின் வெற்றியை மேலும் ஊக்கப்படுத்த, 'ஒரு மாநிலம் ஒரு விளையாட்டு' என்ற முறையை பின்பற்ற வேண்டும். தங்களின் பிராந்தியத்தில் உள்ள திறமையாளர்களின் அளவு, இயற்கை ஆர்வம், பருவநிலை சூழல், இருக்கும் கட்டமைப்புகள் போன்றவற்றின் அடிப்படையில், ஒரு குறிப்பிட்ட அல்லது ஒரு சில விளையாட்டுகளுக்கு, ஒவ்வொரு மாநிலமும் முக்கியத்துவம் அளிக்கலாம். தொழில் நிறுவனங்களும், 'ஒரு விளையாட்டு ஒரு நிறுவனம்' என்ற முறையை பின்பற்ற வேண்டியது அவசியம். புதிய பாரதம் துடிப்புடன் உள்ளது. விளையாட்டில் சிறப்பான முறையில் செயல்படுவதற்காக, அரசு மற்றும் பிரதமரின் முழு ஆதரவையும் நம் விளையாட்டுத் துறை பெற்றுள்ளது. விரைவில் பாரதத்தின் முதல் விளையாட்டுப் பல்கலைக் கழகம் மணிப்பூர் மாநிலத்தில் வரவுள்ளது. இது, விளையாட்டு வீரர்களுக்கு பலன் அளிக்கும். ஒலிம்பிக்கில் தலைசிறந்து விளங்குவதற்கான சூழலை நம் பல்கலைக் கழக அமைப்பு களாலும் ஏற்படுத்த முடியும்' என மத்திய தகவல், ஒலிபரப்பு இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்குர் தெரிவித்துள்ளார்.


# சோம்நாத் கோயில்களுக்கு அடிக்கல்

குஜராத் மாநிலம் சோம்நாத்தில் உள்ள சிவபார்வதி கோவில் ரூ. 30 கோடி மதிப்பீட்டில் சலத்ஸ் முறையில் கட்டப்பட உள்ளது. அதற்கு பிரதமர் மோடி காணொலி மூலம் நேற்று அடிக்கல் நாட்டினார். மேலும் சோம்நாத்தில் பல்வேறு திட்டப் பணிகளுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டினார். இந்த திட்டங்களில் சோம்நாத் ப்ரோமெனேட், சோமநாத் கண்காட்சி மையம், பார்வதி கோவில் மற்றும் பழைய சோமநாத்தின் புனரமைக்கப்பட்ட கோவில் வளாகம் ஆகியவையும் அடங்கும். அதில் பேசிய பிரதமர் மோடி, 'ஆன்மீக சுற்றுலாவை அதிகரிக்க வேண்டும். இதன் மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இதனால் கடந்த காலத்தைப் பற்றிய அறிவை இளைஞர்கள் அறிந்து கொள்வார்கள். பயத்தால் நம்பிக்கையை ஒடுக்க முடியாது என்பதை கடந்த காலத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். பாரதத்தின் ஒருங்கிணைப்பு இயக்கம் (Bharat jodo andolan) பற்றி பேசும்போது, அது வெறும் புவியியல், கருத்தியல் தொடர்பு பற்றியது அல்ல. அது, நமது வரலாற்றின் பாரம்பரியத்துடன் ஒரு புதிய பாரதத்தை உருவாக்குவதற்கான உறுதிமொழி. நமது புதிய பாரதத்தின் வலுவான தூணாக ராமர் கோவில் உருவாக்கப்பட்டு வருகிறது.' என்று கூறினார். இந்நிகழ்ச்சியில் மத்திய உள்துறை மந்திரி அமித் ஷா, மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் கிஷன் ரெட்டி, குஜராத் முதலமைச்சர் விஜய் ரூபானி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விஜயபாரதம்



# ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் கைது



விஜயபாரதம்

மங்களூரைச் சேர்ந்த அம்மார் அப்துல் ரஹ்மான், உபைத் ஹமீத், காஷ்மீரைச் சேர்ந்த முஸம்மில் ஹசன், பெங்களூரைச் சேர்ந்த சங்கர் வெங்கடேஷ் பெருமாள் எனும் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் நான்கு பேரை தேசிய புலனாய்வு முகமையான என்.ஐ.ஏ கைது செய்துள்ளது. அவர்கள் நால்வரும் கேரளா, ஜம்மு காஷ்மிர், கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும், இவர்கள், கடந்த மாதங்களில் பல முறை அங்கு சென்று வந்துள்ளனர். அப்பகுதிகளில் இளைஞர்களை ஐ.எஸ்.ஐ.எஸ்சில் சேர்ப்பது, அவர்களை பயங்கரவாத செயல்களில் ஈடுபடுத்துவது, சமூக ஊடகங்கள் வழியாக ஐ.எஸ்.ஐ.எஸ் சித்தாந்தங்களை பரப்புவது என ஈடுபட்டுள்ளனர் என்பது விசாரனையில் தெரியவந்துள்ளது.

# ஏற்றுமதி உயர்வுக்கு உபார்தே சிதாரா



விஜயபாரதம்

நாட்டின் வளர்ச்சி, அன்னிய செலவானி உயர்வு போன்றவற்றில் இன்றிமையாத பங்கு வகிப்பது ஏற்று மதித்துறை. ஏற்றுமதி வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வறு ஊக்குவிப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதில் குறிப்பிடத்தக்க அளவில் பங்காற்றுபவை சிறிய, நடுத்தர ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள். இதனை ஊக்குவிக்கும்பொருட்டு தற்போது ‘உபார்தே சிதாரே’ என்ற மாற்று முதலீட்டு நிதி (ஏ.ஐ.எஃப்) திட்டத்தை ரூ. 250 கோடி நிதி முதலீட்டுடன் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்று துவங்கி வைக்கிறார். இந்த திட்டம், வருங்காலத்தில் பெரிதாக வளர வாய்ப்புள்ள சிறிய, நடுத்தர ஏற்றுமதியாளர்களை இனம் கண்டு ஊக்குவிக்கும். இது எக்ஸிம் பேங்க் ஆப் இந்தியா, சிட்பி ஆகிய நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. அந்த நிதி, ஏற்றுமதி சார்ந்த அலகுகளில், உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் பங்கு மற்றும் பங்கு சார்ந்த மாற்று முதலீடுகளாக இந்நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டு ஊக்குவிக்கப்படும்.

# காஷ்மீர் சர்ச்சையில் காங்கிரஸ்



விஜயபாரதம்

பஞ்சாப் மாநில காங்கிரஸ் தலைவராக சமீபத்தில் நியமிக்கப்பட்ட சித்துவின் நான்கு முக்கிய ஆலோசகர்களில் ஒருவரான மல்விந்தர் சிங் மாலி, சமீபத்தில் சமூக வலைதளத்தில் ஒரு பதிவை வெளியிட்டுள்ளார். அதில், ' ஜம்மு காஷ்மிர் என்பது ஒரு தனி நாடு. அது காஷ்மீரி மக்களுக்கு சொந்தமானது. பாரதமும் பாகிஸ்தானும் அதனை ஆக்கிரமித்துள்ளன' என, அவர் குறிப்பிட்டுள்ளார். அவரின் இந்த கருத்துக்கு பா.ஜ.க, அகாலி தளம் உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். காங்கிரஸ் கட்சியின் பஞ்சாப் மாநில முதல்வர் அமரீந்தர் சிங்கின் ஆதரவாளர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.


# ஆயுத உற்பத்தியில் தனியார்



விஜயபாரதம்

ராணுவ துறையில் புதுமையான கண்டுபிடிப்புகளுக்கான திட்டத்தை ராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங் துவக்கி வைத்து உரையாற்றினார். அப்போது அவர், 'உலக நாடுகளின் அரசியல் சூழல் தொடர்ந்து மாறி வருகிறது. இது, நம் நாட்டின் பாதுகாப்பு சவால்களை மேலும் சிக்கலானதாக மாற்றி வருகிறது. நம் ராணுவத்தின் ஆயுத தேவைகளுக்காக வெளிநாடுகளை எப்போதும் முழுமையாக சார்ந்திருக்க முடியாது. நம் ராணுவத்தை வலுவானதாக மாற்றினால் மட்டும் போதாது. அதற்கு தேவையான ஆயுதங்கள், தளவாடங்கள் உற்பத்தி செய்வதில் நாம் சுயசார்புடையவர்களாக மாற வேண்டும். நவீன ஆயுதங்கள் உற்பத்தியில் தனியார் நிறுவனங்கள் அதிகளவில் ஈடுபட வேண்டும். அதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய மத்திய அரசு தயாராக உள்ளது' என அழைப்பு விடுத்துள்ளார்.

# டுவிட்டர் சர்ச்சை செயல்பாடுகள்



விஜயபாரதம்

உலகெங்கிலும் அந்தந்த நாட்டுக்கு எதிரான நடவடிக்கைகள், சட்டத்தை மதிக்காத செயல்பாடுகள், இடதுசாரி, பயங்கரவாத சிந்தனை என சர்ச்சையை தூண்டுவதில் முன்னிலையில் இருப்பது டுவிட்டர். அவ்வகையில், தற்போது ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதியாக தன்னை அறிவித்துக்கொண்ட அம்ருல்லா சலேவின் கட்சி, ஆப்கானிஸ்தான் கிரீன் ட்ரெண்ட் (@AfgGreenTrend) மற்றும் சலேவின் அலுவலகம் (@AfghPresident) கணக்குகளை டுவிட்டர் நிறுவனம் முடக்கிவிட்டது. ஆனால், மற்ற தலிபான்களின் டுவிட்டர் கணக்குகளை முடக்காமல் அப்படியே வைத்துள்ளது. இது இணையதளங்களில் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. 'இது வெட்கக்கேடான நடவடிக்கை, பாரபட்சமான செயல், பயங்கரவாதிகளை டுவிட்டர் ஆதரிக்கிறது,...' என டுவிட்டரின் நடவடிக்கை குறித்து சமூக ஊடக பயனாளிகள் பலர் கருத்து பதிவிட்டு வருகின்றனர்.

# காசியில் தொல்லியல் ஆய்வு



விஜயபாரதம்

தற்போதுள்ள காசி விஸ்வநாதர் கோவில், அதன் அருகில் பழைய காசிவிஸ்வ நாதர் கோவிலை தகர்த்து ஔரங்கசீப்பால் அமைக்கப்பட்ட ஞானவாபி மசூதி குறித்த வழக்கில், அங்கு முன்பு கோவில் இருந்ததா, அது இடிக்கப்பட்டுதான் மசூதி எழுப்பப்பட்டதா என்ற விரிவான ஆய்வு நடத்த இந்திய தொல்லியல் துறைக்கு வாரணாசி நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த நீதிமன்ற உத்தரவை எதிர்த்து உத்தரப் பிரதேச சன்னி மத்திய வக்ஃப் வாரியமும் அஞ்சுமன் இன்தசாமியா மசூதியும் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தன. இதனை விசாரித்த நீதிமன்றம், இம்மனுவுக்கு பதில் அளிக்க மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

# போர் விமானங்களில் புதிய மாற்றம்



விஜயபாரதம்

போர்களில் எதிரி நாட்டு போர் விமானங்களை அழிக்க, இலக்கு வைக்கப்பட்ட விமானத்தை தானே துரத்திச்சென்று தாக்கி அழிக்கும் நவீன தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றைத் தடுக்கவும் போர் விமானங்களில் இரண்டு தொழில்நுட்பங்கள் பயன்பாட்டில் உள்ளன. பெரும்பாலும் பயன்படுத்தப்படும் ஃப்ளேர் என்ற தொழில்நுட்பத்தில் விமானங்கள், ஏவுகணையில் இருந்து தப்பிக்க, அதிக அளவிலான நெருப்பை உமிழும். இதனால் ஏவுகணைகள் திசைமாறிவிடும். ஆனால், விமானம் தயாரிக்க பயன்படும் அலுமினிய கலவை உலோகத்தை பயன்படுத்தி விமானங்களை துரத்தும் ஏவுகணைகளிடம் இருந்து இவை தப்பிக்க முடியாது. எனவே, ஃப்ளோரைவிட மேம்பட்ட தொழில்நுட்பமாக சாஃப் தொழில்நுட்பம் கருதப்படுகிறது. இந்த சாஃப் தொழில்நுட்பத்துடன் கூடிய ஜெட் விமானங்களை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனம் (டி.ஆர்.டி.ஓ) தயாரித்துள்ளது. ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் உள்ள டிஆர்டிஓ ஆய்வகத்தில் இவை தயாரிக்கப்பட்டிருக்கின்றன. சாஃப் தொழில்நுட்ப போர் விமானங்கள் பலகட்ட சோதனைகளை வெற்றிகரமாக முடித்து விட்டதால், விமானப் படையில் இந்த தொழில்நுட்பம் தற்போது இணைக்கப்பட்டு வருவதாக டிஆர்டிஓ தெரிவித்துள்ளது.

# வலையில் சிக்கிய மீம்கள்








மரங்களை காப்பாற்ற இதைத் தவிர
வேறு ஏதும் சிறந்த வழி
தெரியவில்லை



# ஓணம் பண்டிகை



விஜயபாரதம்

ஓணம் என்றவுடன் நம் நினைவிற்கு வருவது அத்தப்பூ கோலமும் ஓண விருந்தும்தான். பத்து நாட்கள் கொண்டாடப்படும் இவ்விழா ஆவணி மாதத்தில் வளர்பிறை அஸ்தம் நட்சத்திர நாள் தொடங்கி திருவோண நட்சத்திர நாளோடு முடிவடைகிறது. இவ்விழா கேரளாவின் அறுவடைத் திருநாள், கேரளத்து தீபாவளி, கேரளத்து புத்தாண்டு என பல்வேறு பெயர்களால் சிறப்பிக்கப்படுகிறது. இப்பண்டிகை கேரளா, தென் தமிழகம், மலையாள மக்கள் உள்ள அனைத்து இடங்களிலும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

ஓணம் பழங்காலத்தில் இருந்தே வழக்கத்தில் உள்ளது என்பதனை மதுரைக்காஞ்சி என்னும் பத்துப்பாட்டு நூலிலும், திருஞான சம்பந்தர் தேவாரத்திலும் பாடியுள்ளதன் மூலம் அறியலாம். கேரள மாநிலத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வழக்கில் இருந்ததை செப்புத்தகட்டு செய்தி மூலம் அறியமுடிகிறது.

விழாவின் பத்து நாட்களிலும் மக்கள் பூக்கோலங்கள் வரைந்து இவ்விழாவின் நாயகனான மகாபலியை வரவேற்கின்றனர். வெண்ணிற ஆடைகளுடன் பெண்களின் கைகொட்டு களி நடனம், கலை கலாச்சார நிகழ்ச்சிகள், படகுப் போட்டிகள், யானை அணிவகுப்புகள் நடத்தப்படுகின்றன. இப்பண்டிகையின் போது கசப்பு சுவையினைத் தவிர ஏனைய சுவைகளில் 64 வகையான உணவுப் பொருட்கள் தயார் செய்து ஓண விருந்தினை சுவைக்கின்றனர்.

பக்த பிரகலாதனின் பேரனான மகாபலி சர்க்கரவர்த்தி நடத்திய யாகத்தில், வாமனராக வந்த மகாவிஷ்ணு, தனக்கு மூன்றடி நிலம் தானமாக கேட்டார். சுக்ராச்சாரியார் எச்சரித்தும், தனக்கு நேரும் இன்னல்கள் பற்றி கவலைப்படாமல் வாமனர் கேட்ட மூன்றடி நிலத்தை தானம் வழங்கினார் மகாபலி. விண்ணையும் மண்ணையும் இரண்டு அடிகளாக அளந்த வாமனருக்கு, மூன்றாவது அடியாக பலிச்சர்க்கரவர்த்தி தன் சிரசினை தந்தார். வாமனரும் பலியின் தலையில் கால்வைத்து அவரை பாதாள லோகத்துக்கு அனுப்பினார். அப்போது வாமனரிடம் ஆவணி திருவோணத்தன்று தன் மக்களை கண்டு செல்ல அனுமதி கேட்டார் மகாபலி. விஷ்ணுவும் வரம் வழங்கினார்.

எனவே ஒவ்வொரு ஆண்டும் ஓணத்திருநாளன்று தம் மக்களை காண மகாபலிச் சக்கரவர்த்தி வந்து ஆசி வழங்கி, மீண்டும் பாதாள லோகம் செல்வதாகக் கருதப்படுகிறது. எனவே தங்கள் மன்னனை வரவேற்கும் விதமாக ஓணம் பண்டிகையை கொண்டாடுகின்றனர் கேரள மக்கள். நாமும் மகாபலியை வரவேற்று, அவரின் வாழ்த்துக்களுடன் ஓணம் பண்டிகையைக் கொண்டாடி மகிழ்வோம்.